(4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 31(3) இன்படி கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன்வடிவுகள் என்ற தலைப்பின்கீழ் உள்ளினங்கள் 8, 9, 10 ஆகியவற்றை," உள்ளினம் ஒன்றுக்குப் பிறகு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று" முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(6) அறிவிப்புகள்.

(அ) 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன் வடிவை (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

---

* 25—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.